# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.12/2020

2024 ம் ஆண்டு ஜூன் மாதம் 12 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வ.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 12.06.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோகன் | ஜாதி | : | |
| த /பெயர் | : | வேலாயுதம் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வா.சா.1 முன்னிலை குறுக்கு விசாரண தொடர்ச்சி விசாரணை**

தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் எதுவும் இல்லை. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அங்கு கருவை மரங்கள் இருந்தது. அதை ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் போட்டு கருவை மரங்கள் அகற்றி விட்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவம் யாரிடம் உள்ளது என்றால் யாரிடமும் இல்லை. தாவா சொத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக கருவை மரங்களை அகற்றினார்கள். மாவட்ட ஆட்சியர் அனுமதி அளித்தன் பேரில் கருவை மரங்களை அகற்றினாரல்கள் என்றால் சரிதான். ஊராட்சி மன்றத் தலைவர் மைதானம் அமைத்துவிட்டாரா என்றால் இல்லை.

தாவா சொத்தின் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் பட்டா இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்னதாக பிரதிவாதிகள் கேவியட் மனு அனுப்பினார்கள். அதற்கு பிறகு நான் அனுப்பினேன். அந்த கேவியட் மனுவில் தாவா சொத்தின் அனுபவம் என்னிடம் இருப்பதாக கூறி அனுப்பியுள்ளேன்.

வழக்கு சொத்திற்கு எனது பெயரில் பட்டா இல்லாததால் நான் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை கிருஷ்ணன் என்பவரிடம் கிரையம் வாங்கியதாக கூறி வா.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நானும், கிருஷ்ணன் மற்றும் ராமன் ஆகியோர்கள் கையெழுத்து செய்துள்ளோம்.

அந்த ஆவணத்தில் பக்கிரிசாமி, முருகபாண்டியன் மற்றும் மகேந்திரன் ஆகியோர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். வா.சா.ஆ 12 ஆவணமானது ராமன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சர்வே எண் குறித்த எந்த விவரங்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்திற்கு பக்கத்தில் எனக்கு சொத்து உள்ளது. தாவா சொத்து அரசிற்கும் ஊராட்சிமன்றத்திற்கும் சொந்தமான சொத்து என்றாலும், எனக்கு சொந்தமானது என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.